தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 6, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு—2021
1990, ஏப்ரல் 19, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.''

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும்தான் அரசனுடைய வருவாய் மூலங்களாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

நூலக வரி

*1004. திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, பூங்கா நகர் தொகுதியில் சில வட்டங்களில் மாநகராட்சி நூலகம் இல்லாமல் இருந்தும் பொதுமக்களிடம் நூலக வரி வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பூங்கா நகர் தொகுதியில் 9 கிளை நூலகங்கள் நூலக ஆணைக் குழுவின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மேலும் பி. கே. காலனி, கேசவப்பிள்ளைப் பூங்கா ஆகிய இரு இடங்களில் பொது நூலகங்கள் திறப்பதற்கென உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பூங்கா நகர் நம்புலியார் தெரு கிளை நூலகக் கட்டிடம் பழுதடைந்து இருப்பதால் அக்கட்டிடத்தை இடித்து ரூ. 2.45 இலட்சத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 19

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதிலே பூங்கா நகர்த் தொகுதி, அவருடைய முன்னாள் சட்டமன்றத் தொகுதி. அங்குள்ள எல்லா இடங்களும் அவர்களுக்குத் தெளிவாகவே தெரியும். அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல, பல்வேறு இடங்களிலே அங்கே நூலகங்கள் இல்லை. இரண்டாவது நம்புலியார் தெரு, 57-வது வட்டத்தில் அது இடிக்கப்பட்டு, பல நாட்களாக, பல மாதக் கணக்கிலே இருந்து அங்கே மக்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள். கட்டிட வேலைகள் எதுவுமே துவக்கப்படவில்லை. ஆகவே, விரைந்து செயல்பட இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டப்படுவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அது ஒரு வேளை தாமதம் ஆகுமானால், உடனடியாகக் கவனிக்கும்படியாகத் தெரிவிக்கப்படும்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன், தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. கட்டிட வேலை எதுவுமே நடைபெறவில்லை. அதிகாரிகள் தவறாகத் திசை திருப்புவதை அமைச்சர் உடனடியாகக் கவனிக்க வேண்டும். எனவே, அங்கே கட்டிட வேலையும் இல்லை. அப்படியே இருக்கிறது, உடனடி நடவடிக்கை வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதனால்தான் கவனிக்கப்படும் என்று நான் பதிலளித்தேன்.

திரு. வெ. இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, நூலக வரியைப் பொறுத்த வரையிலே கிராமங்களிலே வீட்டு வரி வசூல் செய்கின்ற போது ரூபாய்க்கு 5 பைசா என்று நூலக வரி வசூல் செய்கிறார்கள். ஆனால் அப்படி வசூலிக்கின்றபோது, அங்கே நூலகங்களே இல்லாதபோது, அந்த வரி வசூல் செய்கிறார்களே, இது சம்பந்தமாக அரசு ஏதேனும் கருத்துக் கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்புழகன்: தலைவர் அவர்களே, இப்படி வரி வசூலிக்கப்படுவதன் மூலமாகத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலேயும், 5,000 மக்கள் உள்ள ஒவ்வொரு கிராமப் பகுதியிலேயும் நூலகம் ஏற்படுத்துவதற்கான முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு, இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.

1990 ஏப்ரல் 19]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கட்டிடம் சம்பந்தமான கேள்வியாக இருந்தாலும், இப்போது நாம் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் எழுதிய புத்தகங்களை ஒவ்வொரு ஜில்லாவினுடைய தலைநகரங்களில் உள்ள நூலகங்களிலே வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அம்மையாரே கேட்கிற காரணத்தால், அதிக அக்கறை காட்டப்படும் (சிரிப்பு).

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் நூலகங்கள் வேண்டுமென்று கேட்கிறபோது, 10,000 ரூபாய் அதற்கு டெபாசிட் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, வருமானமில்லாத கிராமங்களில் நூலகங்களைப் பெறுகிற வசதியை மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை. எனவே, அந்த 10,000 ரூபாய் டெபாசிட் கட்டுவதை அறவே நீக்க முடியவில்லையென்றாலும், அதைக் குறைக்கவாவது நம்முடைய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டெபாசிட் கட்டியவர்களுக்கே இன்னும் நூலகங்கள் எல்லா இடத்திலேயும் வழங்கப்படவில்லை என்பது எனக்குத் தெரிந்த ஒரு செய்தி. எனவே, அதை வழங்கியதற்குப் பின்னர்தான் அடுத்து, வேறு ஆலோசனையே நடத்த முடியும்.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நூலகங்கள் தொடங்குவதற்கு அரசு என்னென்ன நிபந்தனைகள் வைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியான கேள்வி எழுப்பப்படுமானால், விடை சரியாகப் பார்த்துச் சொல்லப்படும்.

9-05 மணி

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, கிராமங்களிலே, புதிதாக அமைக்கப்பட்ட நூலகங்களுக்கு கட்டிட வசதி இல்லாத காரணத்தால், சிறு சிறு கொட்டகைகளில் இருக்கின்றன. அவை மழையில் நனைந்து புத்தகங்கள், வீணாகின்றன. அதற்கு, அரசு திட்டத்தின் வாயிலாக கட்டிடங்கள் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நோக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான நிதிக்கு வழிவகை செய்ய முயற்சிக் கிறோம்.

மாவட்ட நூலக ஆணைக்குழு.

***2166. திரு. என். பெரியசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகரான தூத்துக்குடியில் மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவை பாரதியார் பல்கலைக் கழகம்.

***6165. திரு. கே. ரமணி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகம் நிறுவ நிலம் கையகப்படுத்தியதால் நிலமிழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு பல்கலைக் கழகத்தில் வேலை தருவதாக அரசு வாக்குறுதி கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு சார்பு நிறுவனங்களுக்காக நிலம் கையகப்படுத்தியதால் நிலம் இழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு அந்நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 656, நாள் 29–6–1978 இல் ஆணை இடப்பட்டுள்ளது.